1-10

சுவடி எண்: ௨௬௨

வைத்தியம் பத்திரட்டு

பாகம் — II

9.3.92 to 5.6.92

சுவடி எண்: 262

வைத்தியம் பலதிரட்டு

பாகம் - 2

தாந்திரிக சன்னி குணம்:-

எரிச்சலாயிருத்தல், எழுந்திருத்தல் கண் தலைவலி, உடல் வெப்பமடைந்து அழகு கெடுதல், அறிவு தடுமாறுதல், உடல் துர்நாற்றமடித்தல், கடுப்புண்டாதல், நடு முதுகு வளைதல், நன்மை ஒழிதல், ஆகியவை தானாந்தி சன்னியின் குறிகுணங்கள்.

இதற்கு மருந்து:-

ஆடாதோடை, தூதுவளை, முத்தக்காசு, பற்பாடகம், சிற்றாமல்லி, வழுதலை, குவளை, நன்னாரி, புடல், கடுகுரோகணி, கொத்துமல்லி, சுக்கு, திப்பிலி, சீரகம், இலுப்பைப்பூ ஆகிய மருந்துப் பொருட்களைத் தண்ணீர் விட்டு எட்டிலொன்றாய்ச் சுருக்கி குடிநீராய்க் காய்ச்சி அதில் அளவறிந்து தேனைச் சேர்த்துக் கொடுக்க தானைந்தி சன்னி குணமாகும்.

கண்டகுப்ச சன்னியின் குணம்.

கபமும் காய்ச்சலும் ஏற்பட்டு கழுத்து நரம்பும் கெட்டியாதல், வயிறு, தொண்டை வலித்தல், நாக்கு குளறுதல், கண்கள் அழுதுதல், நாக்கு, மூக்கு இவை வறட்சியாகி திடீரென பார்த்தல், பெருமூச்சாதல், கடுப்பு அதிகமாதல், ஆகிய குறிகுணங்கள் கண்டகுப்ச சன்னியினுடையவை,

194. அ. நாஞ்சுரிக் சன்னி குணம் :- (194 அ)

1. எரிவுடன் அப்படல் எழுந்திருக்கும் கண்
கரிக்கும் தலைவலிக்கும் உடல்வை தம்ப
காந்திகெடும் மதிதப்பும் நாவும் கறுப்புண்டாகும்
நடுமுதுகுவலையும் சத்துவம் கெடும்
இந்தடவு குணங்கள் இவையுண்டா யாகில்
இதுகாணும் தாணாங்கி சன்னி தானே //.

இதுக்கு மருந்து :-

2 ஆடாதோடை தாதுவேளை
அணியார் முத்தம் பற்பாடகம்
சித்த மல்லி வழுதலையும்
சேர்ந்த குவளை நன்னார் ~~புடலும்~~
புடலும் ரோகணி கொத்தமல்லி
பொருந்திய சுக்கு திப்பிலியும்
வெய்ய சீரகம் இலுப்பைப்பூ
எட்டொன் றாக்கி தென்கூட்டி
குடித்த வுடனே தாணாங்கி
குறுகா தோடி போமன்னே /.

ஆ. கண்டகுப்சன்னி :- (கண்டகுப்ச சன்னி)

சேத்துமமும் சரமும் தோணி கழுத்தும் நரம்பும்
விசித்திருக்கும் வயிறு நோம் தொண்டையும் வலிக்கும்
மொழிதானும் தப்பபேசும் கண்ணும் சுழிக்கும்
மூக்கும் நாவும் வறண்டு துடிக்கென பார்க்கும்
பெருமூச்சு சாலகடுப்புண்டா மாகில் அப்போ
சொன்னோம் கண்டகுப்சன்னி என்றும் தானே //.

இதற்கு மருந்து :-

சிற்றரத்தை, சிறுதேக்கு தேவதாரம், சிறுவழுதலை, நிலவேம்பு கடுகுரோகணி, ஆகிய மருந்துப் பொருட்களைத் தண்ணீர் விட்டு எட்டிலொன்றாய்ச் சுருக்கிக் காய்ச்சிக் கொடுக்க தீரும்.

பிரலாப சன்னியின் குணம் :- சொல்லக் கூடாதவற்றைக் கூறுதல், எழுந்திருத்தல், சுரம் அதிகமாதல், எழுதல், சிரித்தல், கண்கள் மலர் போன்று திறந்திருத்தல், குதவாய் குற்றமற்றிருத்தல் ஆகியவை பிரலாப சன்னியின் குறிகுணங்கள்.

இதற்கு மருந்து :-

சிறுவழுதலை, முத்தக்காசு, சிறுதேக்கு, சிறுகாஞ்சொறி, நிலவேம்பு, பொன்முசுட்டை ஆகிய மருந்துப் பொருட்களின் தண்ணீர் சேர்த்து குடிநீராய்க் காய்ச்சி கொடுக்க பிரலாப சன்னி வகை தீரும்.

இதுக்கு மருந்து:-

அத்தரத்தை சிறுதேக்கு தேவதாரம்
சிறுவழுதலை நிலவேம்பு ரோகணியும்
ஒக்க எட்டொன்றாய் காச்சியதின்
வாங்கி கொள்ளிர் எண்பதியும்
எண்பத்தொன்பதியும்
தோஷம் பகருவரே /

195. அ. பிரலாப சன்னி:-

சொல்லாது சொல்லி மெய்போல் எழுந்திருக்கும்
சுரமாய் உழத்தி எழுமே சிரித்து
உரலாய் கண்கள் மேலாய் விழியே திறந்துடனே
அடக்கம் இதுதான் குதவாய் வழும்பின்றிருக்கும்
பிரலாப சன்னி யதுவே //

இதுக்கு மருந்து:-

சிறுவழுதலை முத்தங்காசு
சிறுதேக்கு சிறுகாஞ் சொறி
நிலவேம்பு பொன்முசுட்டை சவன்யாது
கொண்டதின் தண்ணி விட்டு
சடங்கமென காஞ்சதின் குடிப்பீராகில்
பிரலாப சன்னி வகைபோமென்று
பிரமாவும் சிவன்மாலும் பேசினாரே //

இரத்திட்டீவி சன்னியின் குணம்

கண் சிவத்தல், சுரம், விக்கல் உண்டாதல், மூக்கு எரிச்சலாதல், சளி அதிகமாதல், வாய்வு மிகுதல், அறிவு (புத்தி) நிலையற்றிருத்தல், கண்கள் வியப்புடன் பார்த்தல், ஒன்றினைக் குறித்துப் பார்த்தல் ஆகிய குறிகுணங்களைக் கண்டால் ~~அது~~ அது இரத்திட்டீவி சன்னியாகும். இது ~~தொடர்ந்து~~ 10 நாட்களுக்குத் தொடர்ந்து இருந்தால் குணமாகாது.

கொத்துமல்லி, தூதுவளை, சுக்கு, பற்பாடகம், பொன்தீராய், பூசணி இவற்றைச் சேர்த்து தண்ணீர் ஊற்றி எட்டொன்றாய்ச் சுருக்கிக் காய்ச்சி குடிக்க இரத்திட்டீவி சன்னி குணமாகும்.

சீதாங்க சன்னியின் குணம்:

உடல், கை, கால்களிலுள்ள பலம் குறைதல், தலை கவிழ்தல், விக்கல் உண்டாதல், ~~[illegible]~~ நாக்கு உலர்ந்து தாகம் ஏற்படுதல், ஆகியவை சீதாங்க சன்னியின் குறிகுணங்கள்.

(இரத்தபித்த சன்னி)

ஆ. இரைத்திட்ட சன்னி :- குணம் :-

இருகண்ணும் சிவந்துசுரம் விக்கலாகும் நாசி
எரிவுந்து நைநெஞ்சு கப மிண்டு வேதனைவிரவு
உரத்ததெழும் கம்மி வெளியாக நாடப்படும்
அறிவுகெடும் வெருண்டு கண்கள் தொடதாகம்
இவைகள்தனை மிகவாகக் குறித்து பார்க்கும்
இப்படியே செய்வதா லுண்டாகில் தீர்ந்த
நாளையால் அகத்தியர் தானே. //

கொத்த மல்லிகை தாதுவேளை
சுக்கு பற்பாடகம் பளபொன்துராயும்
பூசினியா ரத்தைனமே பரிவுடன்
எட்டொன்றாய் காய்ந்த நீரை
குத்தமற வாஸகி குடிச்ச பேருக்கு
கொடியதான யாத்திட கண்டி போகமே //

196-அ. சீதாங்க சன்னி :-

சீதாங்க சன்னி தனக்கு உடம்பு கைகால்
சிதம்பிடும் சிரசு கிழாகும் விக்கல்
- - . . . . - . . . -
விடாது வாய்உலர்ந்து நீர்தாகம் இவை உண்டாகும்
பிதாங்கம் யதி. . . . .
. . ன்னோம் . . . . . .
யாப்படி யாப்படி தான்கண்டு பாரீர் //

கருநெல்லி, அறுகு, தூதுவளை, வெட்டி வேர், சந்தனம், ஆகிய மருந்துப் பொருட்களைச் சமமாக எடுத்து தண்ணீர் விட்டு எட்டொன் -றாய்க் காய்ச்சிக் கொடுக்க சிதாங்க சன்னி குணமாகும்.

<u>அசுவேத சன்னியின் குணம்</u>:-

உணவு காய்ச்சல் அடித்தல், தண்ணீர் தாகம் ஏற்படுதல், தூக்கம் வருதல் ஆகிய குறிகுணங்கள் அசுவேத சன்னி -யினுடையவை.

கோட்டம், மஞ்சிட்டி, பற்பாடகம், வசுவாசி, சிதேவி, கடுகுரோகணி ஆகிய மருந்துப் பொருட்களைச் சமமாக எடுத்துக் குடிநீராக்கிக் கொள்ளவும்.

நாபி காய்ச்சிய குடிநீரில் இஞ்சிச்சாறு, திப்பிலியைச் சேர்த்துக் குடிக்க அசுவேத சன்னி குணமாகும்.

பூதாங்கம் கருநெல்லி .... ஆ

.... சுரையிரத தண்டும்

மேதாங்கம் தாதுவேளை வெட்டி வேரும்

மே ....

மேலான சந்தனமும் சமனே கொண்டு

நீர்தாங்க எட்டொன்றாய் ......

....

போமென்று செப்பினோமே //

ஆ. அசுவேத சன்னி :-

அசுவேத சன்னி அதின் குணமே தென்றால்

ஆகாரம் இறங்காம் சரந்தண்ணீர் தாகம்

....

.... ர்வைடாது வதைபெற உறக்கமுண்டாம்

உண்மை கண்டால் முசியாமல் ......

.... இவருக்கும்

... இவரும் அசுவேதன் கண்டினோமே //

ஜோஷ்டமைரு ஞ்சிஷ்டி ......

..... வ்லி பிரபாடகம் வசுவாச தாளும்

ஸ்ரீதேவி ரோகணியும் சமனே கொண்டு

....

நாபி காஞ்சனிறில் இஞ்சிசாறு திசலியும்

கூட்டியாது குடிக்க அக் ....

.... /.

கண்டகுப்ச சன்னியின் குணம்

இச்சன்னியில் உடல் புண்போல் வலித்தல், சுரம் அதிகமாக அழுத்தல், விக்காளித்தல், கைநடுங்குதல், உடல் நடுங்குதல், கண் சிவத்தல், தூங்குதல் ஆகிய குறிகுணங்கள் கண்டகுப்ச சன்னியினுடையன.

குடிநீர்:- நொச்சியிலை, அக்கு, தேவதாரம், கடுகுரோகிணி, வெள்ளுள்ளி, ஆகிய மருந்துப் பொருட்களை வகைக்குச் சமமாய் எடுத்து 1:8ல் தண்ணீர் விட்டு எட்டொன்றாய்ச் சுருக்கிக் காய்ச்சிக் கொடுக்கவும். அதனுடன் இஞ்சிச்சாற்றைக் கலந்து கொடுக்க கண்டக சன்னி குணமாகும்.

அந்தக சன்னி குணம்:-

ஆடுதல், பாடுதல், எழுந்திருத்தல், தலைவலித்தல், முக அழகு கெடுதல், அறிவு கெடுதல், கண் எரிச்சல் அடைதல், உடல் வாடுதல், உடம்பிலுள்ள கணுக்கள் வலித்தல், நடு முதுகு வலித்தல், கபம் அதிகரித்தல், ஆகியவை அந்தக சன்னியின் குறிகுணங்கள்.

(குப்பு)

197. அ. கண்டக சன்னி :-

கண்டக சன்னி உடல் புண்போலே இருக்கும்
கருஞ்சுரமும் வெள்ளோக்காளமும்
மிண்டியெழுந்து கைநடுக்கி உடல்நலிந்து கண்ணயர்வு
இருக்கு (உறக்கம்) முறக்கமிவை இருக்குமாகில்
வண்டணியும் குழல்மடவீர் கேளீர் சொன்னோம்
வகையுறவே கிசாயமிட்டு இருக்க போமே//.

நொச்சியிலை சுக்கி னோடு
(தேவாரம்) ரோக ணியும்
வெள்ளுள்ளியும் சமனே கொண்டு
இருநாழி எட்டொன்றாய் காஞ்சகிறில்
இஞ்சிசா றுடன் கலந்து கொடுக்க
சொன்னோமே அணுகிவரும் கண்டக
சன்னி வேதானும் கப்பாலே
கப்பாலே அகன்று போமே/.

: நொச்சியிலை சுக்கு தேவதாரம் கடுகுரோகிணி வெள்ளுள்ளி

அந்தக

ஆ. (அந்திரக) சன்னி குணம் :-

ஆ (அ)டல்பட்டில் எழுந்திருக்கும் தலைநோவாகும்
ஆகமெங்கும் காந்திகெடும் அறிவு சத்துவ மேகெடும்
கண்கரிக்கும் உடல்வெதும்பும் கணுக்கள் நோவும்
நொந்துருகி நடுமுதுகள் (வலிக்கும்) ளளிக்கும் அயர்வெழும்பும்
நோயறிந்து மிதுஉண்மை தானே//. இலம்பகம்

ஆடாதோடை, பற்பாடகம், முத்தக்காசு, தூதுவளை, சிற்றாமுட்டி, இருப்பைப்பூ, சீரகம் சுக்கு, திப்பிலி, முதியார்கூந்தல், கொத்துமல்லி குவளை, நன்னாரி, புடல், கடுகுரோகணி, ஆகிய மருந்துப் பொருட்களைச் சமனெடுத்து தண்ணீர் ஊற்றி காய்ச்சி எட்டிலொன்றாய்ச் சுருக்கிக் கொடுக்க அந்தக சன்னி தீரும்.

கண்டகுழி சன்னியின் குறிகுணம்

பல்கறுத்தல், கண் கருப்பாகி குழியாதல், காய்ச்சலடித்தல், வாய்குழறுதல், தூக்கம் வராமை, உளைவு, கஞ்சி என்று கேட்டுக் கொண்டேயிருத்தல் தளர்ச்சியாகி மயக்கமாதல் ஆகியவை கண்டகுழி சன்னியின் குறிகுணங்கள்.

குடிநீர்:

பற்பாடகம், கிராம்பு, இவற்றை வகைக்கு 5கி எடுத்து தண்ணீர் விட்டு குடிநீராய்க் காய்ச்சிக் கொடுக்க அரம், கண்டகுழி குணமாகும்.

அடாதோடை
பற்பாடகம்
சீந்தற்கொடி
காதுவேளை
சுத்தமுட்டி
இருப்பைப்பூ
சீரகம்
சுக்கு
திப்பிலி
முதியார்கூந்தல்
கொத்தமல்லி
இவனை
நன்னாரி
ரோகணி

ஆடா தோடை பற்பாடகம்
அணியார் முத்தம் காதுவேளை
சித்தா முட்டி இருப்பைப்பூ
சீரகம் சுக்குடன் திப்பிலியும்
முதியன் கூந்தல் கொத்தமல்லி
முழுதும் இவனை நன்னாரி
படரும் ரோகணி சேரயிவை
எட்டொன் றாக்கி குடித்தாவில்
எழுந்தோம் அந்த(ரு) சன்னியண்ணே //

198. அ. கண்ட குழி சன்னி:-

பல்கழுக்கும் கண்ணும் கழுத்து குழிவாகும்
சுரமும் உழலையும் பல்குழையும் (ஊல்குழையும்)
சுகமாய் கண்ணும் துயிலாது
சோரும் கஞ்சி கஞ்சியென்றும்
சொல்லும் தீர்ந்து மயக்கமதாம்
இந்த படியே செய்வதற்கு
சக்தி னருளே கண்டகுழியே //

(~~கிராம்பு~~)
பற்படாகம், கிராம்பு, கறைய கழுந்சுகிறை
ஒப்புடனே இவை குடித்த பேர்க்கு
ஓகந்த சுரம் கண்டகுழியன் ஓடிப்போமே //

அரமரி சன்னி - குணம் :-

நடை தளர்ந்து போதல், பலம் குறைதல், புயம் வலித்தல், தலை புரட்டுதல், புண் போல் வலித்தல், முதுகு வலித்தல், நீர்க்கடுப்பு ஏற்படல், நெஞ்சில் பாரம் ஏற்படுதல், ஆகியவை அரமரி சன்னியின் குறிகுணங்கள்.

பெருவாகை, தூமம், முன்னை, பாதிரி, அதிமதுரம், சிற்றாமல்லி, பேராமல்லி, கரிய வாகை, கண்டங் கத்திரி, தூதுவளை, நெருஞ்சில், நன்னாரி ஆகிய மருந்துப் பொருட்களைச் சமனெடுத்து குடிநீராக்கி அதனுடன் தேனும் இஞ்சியும் கலந்து குடிக்க அரமரி சன்னி குணமாகும்.

அலத்து சன்னியின் குறிகுணம்

கதறி அழுதல், தக்குரல் எழுப்புதல், தம் பக்கத்தில் இருப்போரை அழைத்தல். ஆடையை இழுக்குதல், புரளுதல், உடல் தன் செயலை இழத்தல், இரண்டு கையையும் தலையில் வைத்தல் ஆகிய குறிகுணங்கள் காட்டினால் அவரின் கண்ணில் அஞ்சனம் (மை எண்ணெய்) வைத்து மூக்கிலே நசியமெனப் படும் மருந்தை விடுவர்.

அதிமதுரம், சீந்தில் இவற்றைச் சமமாக எடுத்து சேர்த்து குடிநீராக்க் கொடுக்க வேகமான சன்னி தீரும்.

ஆ. அரமரி சன்னி :- குணம் :-

அறவை நடையும் தளர்ந்து புலம்புகின்றும்
மென்னியுமுழும் நனித்து தலைபுரட்டும் புண் போல
நொந்துபுற வலிப்பும் நீர்கருப்பும் மாலிபாரம்
யாதுகுணங்கள் யாவைதனக்கு உண்டாமாகில் ஒன்று
சொன்னோம் மாமரி தான்கண்டு கொள்ளீர்//.

பெரிய வரகை, குமிழ்முன்னை, பாதிரி,
அரிதாரமும், சித்தமல்லி பேராமல்லியும்,
கரிதான வாழை, கண்டங்கத்தரி, கடவனை,
தேடொணா நெரிஞ்சில் நன்னாரியும்,
தேனும், இஞ்சியும், தேத்து தின்ன திரும்.

199. அ. அலத்து சன்னி :-
கெறிவிழும் கூப்பிடாகும் அருகிருந்தோர் தம்மை அடிக்கும்
ஆடையாறும் உழத்தும் முடல்செயலழியும்
இருகை மேல்தன் வைக்கும் இக்குணங்கள்
உண்டாயாகில் சக்கிசித்து அவர் கண்ணில்
அஞ்சனமே யிட்டு கருகெனவே மூக்கிலே நசியம் செய்ய
அலத்து சன்னிக்கிதமான கிஷாயந் சொன்னோம்.
அதிமதுரம் சிந்திப்புடன் சவணாக கூட்டிக்கொள்ள
முடிகிவரும் சன்னி மிக்ககுகிப் போமே//.

அதிக சன்னியின் குணம்:-

அழகு இழந்து போதல், உடல் வாடிப்போதல், உள்ளம் வாடிப்போதல், தண்ணீர் தாகமெடுத்தல், பலம் குறைதல், வயிறு கழிதல், அறிவு மயங்குதல், மயக்கமுண்டாதல், தெளிவுண்டானது போல இருத்தல், பசியுண்டாதல், ஆகிய குறிகுணங்கள் அதிக சன்னியினுடையவை.

குடிநீர்:- நிலவேம்பு, நொச்சில், சுக்கு, பற்பாடகம், பேராமுட்டி, ஏலம், திப்பிலி, ஆகிய மருந்துச்சரக்குகளை 2.லி தண்ணீரில் போட்டு குடிநீராய்க் காய்ச்சி எட்டொன்றாய்க் குறுக்கிக் குடிக்க எவ்வகைச்சுரமும் சன்னியும் தீரும்.

தசமூல வாத சன்னியின் குறிகுணம்:- தவமுடையன், தாந்திரிகம், கண்டகுப்சம், பிரலாபன், இரத்திட்டீவி, சிதாங்கன், அசவேதன், கண்டனென், அந்திரிகன், கண்குழியன், அர்மறி, அன்வதிகன் ஆகிய பதின்மூன்று சன்னிகளையும் ஈசன் உலகத்தார்க்குக் கொடுத்தான்.

கண்டரோகம்:-

பூநாகம், வெள்ளரிவிதை, கோட்டம், அதிமதுரம், திப்பிலி, ஆலம்பழம், ஆகிய மருந்துப் பொருட்களை எடுத்து அரைத்து தாய்ப்பாலில் உரைத்து நாக்கில் தடவி உள்ளுக்கும் கொடுக்க நாக்கு வன்மையாகும்.

ஆ. அதிக சன்னி :-

அழுகழியும் வெதும்புளத் துளத்தும் அறவலைந்து
வயிறதுபோம்.
தண்ணீர் தாகம் புலம்புகின்றும் மதிமயங்கி மூர்ச்சை
யுண்டாம்
பின்னே உடனே தெளிவுண்டாம் பசியுமில்லை
முக்கியாகும்
கஷாயம் கிருக்கிசன் மூக்கில் நசியம்
உண்மையதே
வகையுடன் நிலவேம்பு நொச்சியில் சுக்குவெறச்சியும்
பற்பாடகம் முதிவனைத்தண்டு பேராமுட்டி ஏலம்
திப்பிலியும்
கூட்டியேணியாம் கஷாய திரிலயம் பிரயோகங்கள்
எட்டொன்றாய் காய்ச்சி குடித்த பேருக்கு
எச்சரமும் ஆகசன்னி எல்லாம் போமே//

200 அ. சிரமேல வாத சன்னி :-

சேந்த பதுமூன்றும் இசையாக சொன்னோம்
இவைதான் திசைபிறவே தாங்கிருக்க கண்ட குச்சன்
தவமுடையன் பிரலாபன் இரத்திபிட்டி இயல்வொிய
சிதாங்கன் அசவேதன் கண்டனை நிறிய
அந்தரிகன் கண்குசியன் அசையாத அறமறி
அன்வதிகன் ஆகவகை பதிமூன்றும் சன்னிபோக்க
முசியாமல் உரைத்திட்டார் உலகத்தோர்க்கு
முக்கண்ணீசன் அருளானான் முயன்று தானே//

கண்டா (அவுஷதம்:) ஔஷதம்

நூன்ரகம், வெள்ளைவிதை; கொத்தம் அதிமதுரம்
திப்பிலி ஆலம்பழம் யானை முனைப்பாலில் உரைத்து
நாக்கில் தடவி. உள்ளுக்கும் கொடுத்தால் நாக்குத் திரும்
பும்.

சன்னி குணமாகும். சங்கு, பூநாகம், கலைக்கொம்பு, திப்பிலி, கற்பூரம் இவற்றைச் சேர்த்தரைத்து தேனில் கொடுக்க நாக்கு வன்மை பெறும். சன்னி குணமாகும்.

<u>நாக்கு இழுப்பு சன்னிக்குக் குளிகை</u> :-

வெண்காரம் 20கி, கையாந்தகரைச் சாறு 1.3லி, பழுத்த மிளகு 1.3லி, எடுத்து சாற்றில் இவ்விரண்டை-யும் பொடித்துப் போட்டு காய்ச்சவும். காய்ச்சும் பொழுது நல்ல பதத்தில் 20கி கோமணாதியையும் அதில் பொடித்துப் போட்டு கிளறி 5கி அளவுள்ள வில்லைகளாக உலர்த்திக் கொள்ளவும். அதனை வேளைக்கொன்றாக எடுத்து தேனில் உரைத்துக் கொடுக்க தீரும். கசப்பு, புளிப்புள்ள பொருட்க-ளைத் தவிர்க்கவும்.

<u>வாத சன்னியின் குறிகுணம்</u>

கண்ணும் வாயும் சோர்வடைதல், கால் கை சோர்வாதல், நாக்கு தளர்ச்சியாகி பேசமுடியாது போதல், தோள், செவி சில்லிட்டுப் போதல் புண் போல உடல் வலித்தல், ஆகிய குறிகுணங்களைக் காட்டினால் வாத சன்னி என்றுணரலாம்.

<u>பித்த சன்னியின் குறிகுணம்</u> :- வாய் பிதற்றுதல் சிரித்தல், முகம் அதித்தல், புருவம் நெறித்தல், உடல் வெளுத்துப் போதல், ஆகியவை பித்த சன்னியின் குறி குணங்கள்.

சன்னி திரும்பும் சங்கு பூநாகம் கலைக்கொம்பு
திப்பிலி கற்பூரம் கூட்டி அரைத்து தேனில் கொடுக்க
நாக்கு திரும்பும் சன்னி திரும்பும்.

201. அ. நாக்கு குழறு சன்னி:-

வெங்காரம் நாற்கழஞ்சு கையாந்தகரை சாறு நாணாழி
பழுத்த மிளகு நாழி பொடிசெய்து போட்டு காய்ச்சி
பதம் வருகிற தருவாயிலே சோமனாதி நாற்கழஞ்சு
பொடிசெய்து போட்டு துவாவி காய்ச்சி கழஞ்சு பிரமாணம்
உருட்டி வில்லை ~~பண்ணி~~ செய்து நிழலில் உலர்த்தி நித்தம்
இரண்டு நேரமும் ஒவ்வொன்று தேனிலே சரித்துக் கொள்ள
வும். கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

ஆ. வாத சன்னிக்கு:-

கண்ணும் வாயும் சோர்விக்கும்
காதும் கையும் சோர்வாகும்
என்றும் நாவும் சொல்குளர்ந்து
இலதோர் செவியும் சில்லென்றும்
புண்ணும் போலே உடம்பை நொந்து
பொல்லாங் கெல்லாம் சொல்லிவிக்கும்
வன்ன மினைவதனை கண்டக்கால்
வாத சன்னி இதுவென் றுரையீர்//

பித்த சன்னி:-

பெருகும் பித்த சன்னிக்கு
பிணாத்தும் சிரிக்கும் மிகஞ்சுழிக்கும்
புருவம் நெறிக்கும் வாய்பிணாத்தும்
போத வெளுக்கும் மேனியெங்கும்//.

~~குணங்க~~ செத்துவ சன்னி குணம்.

களங்க சிலேத்தும சன்னியின் குணம் :-

கண்கள் சொருகிக் கொள்ளுதல் கன்னங்கள் வீங்குதல், தோல் தளர்ந்து போதல், மேல் மூச்சாதல், வாயில் அழுக்காதல், ஆகியவை களங்க சேத்தும சன்னியின் குறிகுணங்கள்.

வாதசிலேத்தும சன்னி :-

உடல் வலித்தல், குளிர்தல், இருமல், உடல் எரிதல், சிலேத்தும சுரமடித்தல், நீ கால் கிடந்து இழுத்தல், அறிவு கெடுதல் உடல் வெதும்புதல், பெருமூச்செறிதல், ஆகிய குறிகுணங்கள் வாத சிலேத்தும சுரத்தின் குறிகுணங்கள்.

பித்த குணம் :-

உழலுதல் முகம் வியர்த்தல் கன்னம் சில்லென்றாதல், காது கேளாமை, ஆகிய குறி குணங்கள் வாத சன்னியினுடையவை.

கொங்க சேத்தும சன்னி குணம் :-

சொருகு கண்கள் கன்னங்கள்
குழிந்தே பார்த்து விங்கிவிடும்
சோரும் சேத்து மகோதண்டம்
சொல்லும் தளர்ந்து குரல்தாழும்
[illegible]ரும் நெஞ்சும் மேல்மூச்சும்
வாயில் வழும்பு மிகவுண்டாம்
பாரு மதனை தானத்தால்
பாரின் வாழும் பெரியோரே //

202. அ. வாதசிலேத்தும சன்னி :-
வாத சேத்துமம் கூழ்ம சன்னி :-

சிரமும் நொந்து குளிர்ந்தே நெஞ்சில் தடரும்
பரந்தேறி நெறியயாறுமல்து ஒசுட்டி போல அழுந்த
தோன்றும் சொன்னோம் சிலேத்தும சுரமிதுவே
நெரும்பல் காலிழுந் திமிர்ந்து சிலையற உள்ளம்தான
கறுத்து பாரும் பால்கால யாவைவை தம்பும்
பகையும் நெஞ்சும் பறையறை யறைந்தார்
அழைப்பு பெருமூச்சும் சோதிவை ஒருப்பும் அழுத்தியுமாய்
ஒருவாத சேத்துமத்தின் உத்திர சுரத்தின் குணமிதுவே //

பித்த குணம் :-

வந்துமூழும் முகம்வேர்க்கும் சித்த கன்னம் சில்லென்றும்
செவியும் கேளாதே இருக்கும் சத்து பிதனை கண்டக்கால்
கருதிர் வாத சன்னி யண்ணே //

வலித்தல், வெதும்புதல், பெருமூச்சுதல்,
அழுவுதல், வாய் பிதற்றுதல் ஆகியவை
அசாத்திய வகையாகும்.

<u>சிலேத்துமத்தின் குணம்</u>:-

சிலேத்துமத்தில் வாதம் சேர்ந்து கொள்ளல்
சுரங்கள் பலவகைகளாதல், நாக்கானது தித்திப்பு
சுவையாக இருத்தல்,
குறிகளில் குத்தல் எடுத்தல் ஆகிய குறிகுணங்கள்
சிலேத்துமத்தினுடையவை.

இருமல் உண்டாகி மூக்கில் நீர் வடிந்து வாய்நீர்
வடிதல், அதுவே அதிகமாகி வாந்தியுண்டாதல்,
தூக்கம் வருதல், உடல் குளிர்தல், வாடிப்போதல்,
உதடு, நாக்கு, கண்கள் ஆகியவை வெளுத்துப்
போதல் ஆகியவை குறிகுணங்கள் சிலேத்துமத்
-தினுடையவை.

நொந்தே தோறும் வெதும்பிக்கும்
நொந்தே தோற்றும் பெதுகணம்
நெடிய மூச்சு முளைதாகும்
அழன்று வாயும் வாயபினத்தும்
அப்போதப் போற்றி வழியும்வகையாய்
விரிக்கும் அசாத்திய மிதென்றே //

203. அ. சிலேத்துமத்தின் குணம் :-

சிலேத்தும வாதங் கூடி
செப்பிலா சுரங்க ளாகி
நாக்குடன் தித்திக் கொள்ளும்
நாடியால் தியானங் கொண்டு
கொற்பட வசத்தி னாலே
ஒத்திடும் குறிக ளெல்லாம்
வாற்பட வதனை விந்த
வறியுடன் பிறியு மண்ணே /

இருமலும் மூக்கு நீரும்
இசலியே வாயினீர் வந்து
பெருகியே சத்தி தோன்றி
பேணியே உறக்கம் வந்து
மருவிய உடல்கொளுந்து
வகைப்பட வெதும்பு மாகில்
கருதிய உதடு நாவும்
கண்களும் வெளுக்கும் தானே //

பித்த சுரத்தின் குறிகுணம்:-

வாய் நாறுதல், தலை சுழலுதல், மூக்கில் நீர் பாய்தல், பல்கடித்தல்

சன்னி நசியம்:-

குங்குமப்பூவினை முத்து நீரில் கசக்கி மூக்கில் நசியமிட சன்னிகுணமாகும். வெல்லம், சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவற்றைப் பொடித்து பூசணிப் பூ சாற்றில் கலந்து மூக்கில் நசியமாக விட சன்னி தீரும்.

கெர்ப்பிணி நசியம்

பிரசன்னி, தனுர்வாதம் இவற்றிற்குப் பிரிந்து

அகத்திப் பூப்பை சாறு எடுத்துக் கொள்ளவும். அதில் மிளகளவு கோமயனாதியைக் கரைத்துக் கலந்து மூக்கில் நசியமாக விட தனுர் வாத சன்னி தீரும்.

எலுமிச்சம் பழச்சாற்றையும் நல்லெண்ணையையும் சம அளவெடுத்து அதில் ஒரு கைப்பிடியளவு இடித்துப் போட்டு கொதிக்க வைத்துக் கொள்ளவும். ஆறிய பிறகு மூக்கில் நசியமிட்டு மேலுக்குத் தாளை செய்து புகை பிடிக்க அனைத்து சன்னியும் தீரும்.

மயர்வெண் டெறிதுத் வேண்டும்
மருவி யலகால்க் கொட்டாவி
கையவெண் டெறிந்து காலிடையும்
கருதித் துடைக்ப் கையசேரும்
குயில்வெண் டெறிந்த மொழிமடவீர்
கூட சொல்லும் குறிகண்டால்
பையவெண் டெறிந்த பரமனாணை
பார்த்தே யநீர் புகர்ந்தீரே //

பித்தசுரம்:-

வாயிநாறும் தலைசுழலும் மூக்கு நீர்பாயும்
பத்தத்து பல்க்க டிக்கும் //

204. அ. சன்னி நசியம்:-

ஏர்க்குமே குங்குமப்பூ முத்து தண்ணியில்
← கசக்கி மூக்கில்விடு பின்னவும் தேள்
பூசிணிபூ சாத்தில் பெருந்துவெல்லம் திரிகுகு
← நாசியில்விட சன்னி நாசமாம் //

கெற்பிணை மேல்:- பிரசன்னி தணர்வாதம் யாது நசியம்: (இலைகள்3)

அகத்தி பழுப்பு நசுக்கி சாறுகொண்டு அதிலே மிளகு ~~பிரமாணம்~~ அளவு சோமனாதி கரைத்து நசியம் செய்யவும். இதுக்கு தணர்வாத சன்னி தீரும்.

சன்னிக்கு எலுமிச்சம் பழச்சாறும், நல்லெண்ணெயும் சமன்கொண்டு அதில் சித்திரமல்லா ஒருபிடி நசுக்கி போட்டு கொதிப்பித்து இறக்கி நாசியாலும் விட்டு மெழுகுமிட்டு புகைகொள்ள சர்வ சன்னியும் தீரும்.

கலிக்கம்

பெருங்காயம், சீரகம், அக்கு, மிளகு, திப்பிலி, ஆகியவற்றின் விதைகளை வகைக்கு 4 கி எடுத்துப் பொடித்து கோமியத்தில் கரைத்துக் கொள்ளவும். பேய்த்தகரைத் துண்டையும் அதில் பொடித்துக் கண்ணில் கலிக்கமாக இட பதினெட்டு வகை சன்னியும் குணமாகும்.

ஆ. சன்னி கலிக்கம்:- பதினெட்டு சன்னிக்கும்:-

ஆடமணக்கெண்ணெய் கொட்டை, சித்தை வேர், குட்டி வேலம் வேர், நாழி எண்ணெய்க்கு சரிகூட்டி சாறு கொண்டு இதில் சேராங்கொட்டை ஒன்று, வன்னத்து வேர், சாறுவேளை வேர், உமத்தை வேர், ஆவாரை வேர், யிவை சேரொன்று எலுமிச்சங்காய் அளவு முசுத்துமுடை, நூவிரகம், ஒன்றொன்று ஒருபிடி கூட்டி நீத்தில் அரைத்து உள்ளுக்கு கொடுத்து மேலுக்கும் பூசவும். இதுக்கு சன்னி பதினெட்டும் தீரும்.

காயம் சீரகம் காக்கும் திரிகடுகு
உரிய வகைவித் தோரொன்று காசிடை
பெரிய கோழியம் பெய்த்தரைத் துண்டையை
சாரிய கண்ணிலிட சன்னியுந் தீருமே.//

205. அ. ஆறு அதிசாரத்துக்கும் மருந்து:-

மாதுளம் பழத்தோல் உலர்ந்த மாவேடு மாவிரை புளியம் காட்டாத்திப்பூ, விளாங்கனி, பெருமரத்தோல், புளியம் கொட்டைத்தோல், கருஞ்சீரகம், குரோசாணி ஓமம், அசமதாகம், நிலவம்பிசின், வில்வக்கனி, கடுகு, கழல் பருப்பு, வெட்பாலரிசி, முத்தங்காசு, கிராம்பு, திப்பிலி, வட்டத்திருப்பி, இந்துப்பு, சுக்கு, கருவேப்பிலை, மிளகு, கடுக்காய், சாதிக்காய், அதிவிடையம் யாவையும் சம பாகமாக கூட்டி நல்லெண்ணெய் விட்டு வறுத்து காசு கட்டி கூட்டி சூரணம் செய்து பாதி பிரித்து வைத்து கொண்டு மீதி பாதி எடுத்து வாழைப்பூ சாறு, நீர்புல்லாந்தி சாறு, வறப்புல்லாந்தி சாறு, மாதுளை வேர் சாறு, மாதுளை பிஞ்சு சாறு,

கோரைக்கிழங்கு சாறு, அத்திபட்டை, மாம்பட்டை, நாவல்பட்டை, கிளிஞ்சிபட்டை, பங்கம் பாளைவேர், கருவேலம்பட்டை யிவைகூட்டி சாறுகொண்டு யிந்த சாற்றில் பாவினை அரைத்து காசுபோலே வில்லை செய்து நிழலில் உலர்த்தி வைத்து யாதொருவகை கழிச்சலுக்கும் எருமை தயிரிலிடவும். அதிசாரத்திற்கு தேனிலும், தயிரி சுமிடவும். மேற்படி பாதியும் நல்லெண்ணெய் உருக்கி வறுக்க வேண்டாம். மேற்படி பொடிசெய்து இடவும். அதிசாரம் ஆறுக்கும் குணமாம். வாத அதிசாரம், பித்த அதிசாரம், சன்னிவாதம் ஆன அதிசாரம், ஒன்று கோபத்தால் தோன்றும், ஒன்று பயத்தாலே தோன்றும். ஆறு அதிசாரமும், தேன் போலவும், நெய் போலவும், இறைச்சி கழுவின நீர் போலவும், சாணி வண்ணமாகவும், உதத்தை மிக நாறும், மலம் (பிறபட்டு போகாது) நீராம்பமெனவும் இருண்டிருக்கும். சன்னியும் நீரிலே மலத்தைவிட்டால் மிதந்ததாகில் நீளயமாம். அமந்ததாகில் ஆமமாம். இதுக்கு பரிகாரம், உக்காரம் பண்ணி பட்டினியாய் கிடந்து சுக்கு, கடுக்காய், முத்தக்காசு, அதிவிடையம், வசம்பு, தேவதாரம் யிவை பன்னிரு கழஞ்சு யிருநாழி நீரிலே எட்டொன்றாய் காய்ச்சிக் குடிக்க ஆறு அதிசாரத்துக்குமாம்.

<u>வாத அதிசாரத்திற்கு :-</u> வறசுண்டி, அத்திப்பூ, சுக்கு, மிளகு, குமிளம் வேர், சிறுமிளகு யிவையெல்லாம் பன்னிரு கழஞ்சுயிட்டு யிருநாழிநீர் எட்டொன்றாய் காய்ச்சி குடிக்கவும்.

இக்கு அதி

பெருமரம், கோரை, வில்வம், அதிவிடையம், விளாமிச்சைவேர், விளாவேர் ஆகிய மருந்துச் சரக்குகளைச் சமமாக எடுத்துக் குடிநீராய்க் காய்ச்சி அதில் தேன் சேர்த்து குடிக்க சுரம், அதிசாரம், சன்னி, சோபை, கிராணி ஆகியவை குணமாகும்,

ஆல், அத்தி, வெங்காயம், நாவல், அரசு, மா, இலவு, ஆகியவற்றின் துளிர்கள், முத்தக்காசு, விளா, அதிவிடையம் ஆகியவற்றைச் சேர்க்கவும்.

பித்த அதிசாரத்திற்கு:-

வட்டத்திருப்பி, வற்சண்டி, அதிவிடையம், முத்தக்காசு, குமிளம் சதை, சுக்கு, திப்பிலி, மாபிஞ்சுக்காயும், வெட்பாலரிசி இவையெல்லாம் சரியான் கொண்டு காய்ச்சி குடிக்க அதிசாரம், இரத்த சூலை, ஆமம் இவை தீரும்.

பத்தியம்:- வெள்ளாட்டுப்பால் வார்த்து கொள்ளவும்.

வறுத்தியடிக்கவும். குமிளம் வேர், அதிவிடையம், முத்தக்காசு, பஞ்சலோகம், பன்னிரு கழஞ்சு விட்டு காய்ச்சி குடிக்கவும். ஆம அதிசாரத்திற்குமாம். தயிர் அருநாழி சுக்கு ஒருபலம், மூலகம் யிருபலம், கொடிவேலி ஒருபலம், உப்பு இருபலம், இந்த எருமையுடன் தண்ணீர் வார்த்தரைத்து நாழி உரி நல்லெண்ணையுங் கூட்டி எரித்து வடித்து கொடுக்க அதிசாரமும் உறக்கமும் தீரும்.

பெருமரம் கோரை வில்வம்
பேரதி விடையம் நல்ல
விரவி லாமிச்சை வேரும்
விளாவேரும் ஒக்க கொண்டு
அடவுடன் கிஷாய மிட்டு
அதியுடன் தேன்வார்த் துண்ண
சுரவதி சாரம் சன்னி
கோபமும் கிராணி போமே//.

ஆத்தி வெல்லி நாவல் அரசு
அரசு மாவிலவு மொக்க
சிலந்த துனிர்தாக செந்தபின்
முத்தக் காசு
நாலத்துள்த் திப்புலி கூட்டி
அவ்விளா விலாவுங் கூட்டி
வேளைக்கு விடையம் அவ

விரட்டி சுரம் தீர்க்க.

அதிவிடையம், கோட்டம், மராட்டி மொக்கு இரு வேலி, மாதுளை, முத்தக்காசு, ஆகியவற்றை வகைக்குச் சம அளவெடுத்து குடிநீராய்க் காய்ச்சிக் கொடுக்க அதிசாரம் குணமாகும்.

அதிசாரம்

தென்னம்பாளை, வாழைப்பூ, பாதிரி இவற்றைச் சுத்தம் செய்து புட்டவியல் செய்வதற்காக உரலின் மேல் வைத்து ஆவியால் வேக வைத்துக் கொள்ளவும். அதனுடன் அதிவிடையம், சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவற்றையும் சேர்த்து தேனையும் தகுந்த அளவு விட்டு கலந்து உட்கொள்ள அங்கத்திறந்த அதிசாரம் குணமாகும்.

கருவாழையின் மொட்டு, மருது, கடம்பு ஆகியவற்றின் கொழுந்துகள், நுணா, வீழி, புளியாரை, நாவல், திரிகூலி, தூதுவளை ஆகிய மூலிகைகளை 3 மணி நேரம் வேக வைத்து வகைக்கு 3.25 மி.லி சாறு சாறை எடுக்கவும். அதனுடன் 4கி தேனைக் கலந்து குடிக்கவும். நோய்கள் தீரும்.

207. அ. அதிவிடையம் கோஷ்டம் மொட்டுருவேலி
← மாதுளை முத்தமொடு பெருகிட முருக்கியசீர்
நாவிடை வைக்குமொட நம்முட அதிசாரம்
மேமன விதுவேதான் புவியனில் உள்ளோர்க்கு தானே//

அதிசாரம்:-

தென்னம் பாளை வாழைப்பூ
திகழும் புதவ பாதிரியும்
மொட்டுக்கும் உலைமேல் புடமிட்டு
பொருந்து விடையம் திரிகடுகு
செங்கண் சிவந்த மடநல்லீர்
திகழும் தேன்வார்த்த தண்பீராய்
அங்கம் திறந்த அதிசாரம்
அண்ணே அகலும் கண்டீரே //

கருவாழை மொட்டுமருதம் கடம்பு
கபலின் கொழுந்துடன் நுணாவின்
திருவான வீழியன் புளியாரை நாவல்
திரிகூலி சுதயிலையும் ஒருசமம்
சருகெரிந்து அதின்சா றுமக்கி
காசிடை தேனும் வழுவாமலே வந்த
வருணாதி யுண்ண வயிறா
ணோய்கள் தான்கெ டுமே //

~~கருங்காலி புங்கு கடம்பு நாவல்திரிபுடி~~
~~மிக்கு கண்டல் மீடர்ந்த கோரையுக பிரண்டை வந்த~~
~~உ ஊக்குதாக்கி~~
~~யாரனைந்த வெந்த வெட்டிவேரு தண்ணீர் [illegible]~~
~~மேல்சுண்டை வாரம் அரைத்தெடு [illegible]~~

கருகு, புங்கு, கடம்பு, நாவல், ஆகிய மூலிகைகளை ௨.6லி தண்ணீர் விட்டு 3௨5.மி.லி யாகச் சுண்ட வைத்துக் கொள்ளவும். அதனை அவ்வாறே வைத்தி-ருந்து விடியற்காலையில் குடிக்க போரில் பட்ட புண்ணின் வடுவானது மாறும்.

வட்டத்திருப்பி, முத்தக்காசு, மலைவேம்பு, மாதுளை, சுக்கு, ஆகிய மருந்துப் பொருட்களை எடுத்து கருப்பு எண்ணெயில் வறுத்துப் பொடித்து தயிரில் கலந்து விழுங்க கழியும் அதிசாரம் தீரும்.

பருத்திப் பிஞ்சு ஜாதிக்காய், கிராம்பு, வசுவாசி, அதிவிடையம், அசமதாகம், காரம், இலந்தைப் பழம் ஆகிய மருந்துச் சரக்குகளைச் சமமாக எடுத்து அரைத்து அதில் தேனைக் கலந்து கொடுக்க அனைத்து வகைக் கழிச்சலும் குணமாகும்,

கருகொடு புங்கு கடம்பு நாவல்த்
திற்மகு சண்டில் மிடாங்கை கொறையடு
முருஙாழி வர்த்த உழக்க தாக்கி
இரவொடு வெந்த வெடிவொடு திண்ண
பொருணுடை விணாரம் அற்பதோ டொருபதும்
சேனைமறு கடல் அடைசெய்து மண்டு போர்தனில்
விழிபடு குருதியும் வடும்பு மாறுமே.//

வட்டத் திருப்பி முத்தங்காசு
மலையின் வேம்பு மாதனையும்
கட்டிக் காசு சக்குடனே
காறன் னெண்ணெய் பொரிவறுத்து
பிட்டு தயாரில் பதற்பெய்து
பேணி முஷங்க வல்லீராய்
ஓட்டிக் கழியும் அதிசாரம்
ஓடிப் போகும் கண்டீரே.//

பருத்திப் பிஞ்சும் சாதிக்காய்
பகரும் கிராம்பு வசுவாசி
அருத்த மான அதிவிடையம்
அசம தாகம் காரமுடன்
இலந்தை மரத்தின் பழமம
ஒக்க கூட்டி நேர அரைத்து
இரத்த மான கழிச்சலுக்கு
எல்லா கழிச்சலுக் கிப்படியே
கட்டி தேனில் கொள்வோர்க்கு
கழிச்சல் எல்லாம் போய்விடுமே.//

நாவல், ஆல் இவற்றின் கொழுந்துகள், இலவ
பிச்சை, சுக்கு ஆகிய மருந்துச் சரக்குகளைத்
தட்டி குடிநீராய்க் காய்ச்சிக் கொடுக்க சுரம்,
அதிசாரம், சோபம், நீர் வேட்கை ஆகிய நோய்கள் தீரும்.

சுக்கு, எள், உப்பு ஆகியவற்றைச்
சேர்த்து பொடித்து நல்லெண்ணெயில் கலந்து
குடிக்க சூலை, அதிசாரம், நீங்கும்.

மிளகு, ஏலம், சுக்கு, வெள்ளுள்ளி ஆகிய ~~[illegible]~~
மருந்துச் சரக்குகளைச் சமமெடுத்து 2.6லி தண்ணீரூற்றி
325 மி.லி யாகச் சுருக்கிக் காய்ச்சிக் குடிக்க
கழிச்சல், இரைச்சல், கடுப்பு, பொருமல், அதிசாரம்
ஆகிய நோய்கள் குணமாகும்.

இரத்த அதிசாரத்திற்கு

வரட்புல்லாந்தி வேரை ஒரு பச்சைப்
பாக்களவு எடுத்து அரைத்துக் கொள்ளவும் 1/2 கி அழிஞ்சில்
வேர்ப் பொடியையும் சேர்த்துத் தயிரில் அரைத்துத்
தேனில் குழப்பிக் கொடுக்க கடுப்புக் கிராணி,
இரத்த அதிசாரம் தீரும்.

208. அ. நாவல் ஆலம் கொழுந்து
நல்வில்வ பிச்சை சுக்கு
ஆவலோர் கஷாய மாக்கி
மேவு சுரமும் அதிசாரம்
சோபம் கிர்தாபம் ஆறும்
இதுவே பாடில ஒக்குமாம் //

சுக்கு கழல்ஓமம் தொன்ன எள்வளைக்
கொண்டக்க பண்ணி உப்புடன் கூட்டி
தக்கபொடித்து நல்லெண்ணெயில் பருகின்று காமாலை
சூலைபோம் இல்லை அதிசாரமினி //

மிளகு ஓமம் சுக்கு வெள்ளுள்ளி நாகும்
அழுவி இருநாழி மோர்ஒழுக் கொணவே
காய்ச்சி குடிக்க கழிச்சல் விரைச்சல் கடுப்பு வேர்ச்சை
போச்சே பொருமல் இவைதான்.
அதிசாரங்களுக்கு இப்படி சாப்பிட்டால் தீரும்.

ஆ. இரத்த அதிசாரத்திற்கு :-

வாழ்ப்புல்லாந்தி வேர், ஒரு பச்சை பாக்களவு அரைத்து
அரிஞ்சில் வேர்பொடி அரை கழஞ்சிடை தயிரில்
அரைத்து தேனில் குழப்பிக் குடிக்க கடுப்பு கிராணி
இரத்த அதிசாரமும் போம்.

வாழைப்பூ பருமடல் வாங்கிப் போட்டு அவித்து
பிட்டுபோல் பிழிந்து அதில் கிராம்பு, சுக்கு, அசமதாகம்,
அதிவிடையம், வசுத்தியிவை அரைத்து கலந்து தேனை
வார்த்து குழப்பி குடிக்க இரத்த கடுப்பும், அதிசாரமும்
தீரும்.

பெருமரம், வில்வம், அதிவிடையம், சுக்கு, குடசப்பாலை, கொத்துமல்லி, வேம்பு, சீரகம், சாதிக்காய், காராம்பூ, பற்பாடகம், பொன் முசுட்டை, மாதுளை ஆகிய மருந்துச் சரக்குகளைச் சமனெடுத்து 1·3லி தண்ணீரில் போட்டு குடிநீராய்க் காய்ச்சிக் கொள்ளவும். அதனுடன் 244மி·கி அபினைச் சேர்த்துக் குடிக்க அதிசார சுரம் குணமாகும்.

பெருமா = கோன் வில்லை
போதிய விடையம் சுக்கு
இறைபடா கொடிசப் பாலை
கொத்தமல் லியையும் வேலம்
கறிக்கிரு சீரம் சாதிக்காய்
காரம் பூவும் நல்ல
பற்பாடகம் நல்ல பொன் முசுட்டை
படர்க மாதுளையு மெக்க
சவணிவை யாகக் கொண்டு
தரித்திடு நாழி நீரில்
அடவுடன் போட்டுக் காய்ச்சி
209-அ. அவின்பண வெடையிற் பாதி
அதினுடன் கூட்டிக் கொள்ள
அதிசார சுரமும் போமே //

இரத்த அதிசாரத்திற்கு :-

பொன் முசுட்டையும் சுக்கு மிளகும் கூட்டி யடித்து நாழி தண்ணீரிலிட்டு உழக்காக காய்ச்சி குடிக்க அதிசாரம் சுர கழிச்சல் தீரும்.

இரத்த சீத கடுப்பிற்கு :-

அழிஞ்சில் வேர் பட்டை அரைத்தது பாக்களவு நல்லெண்ணையில் உருட்டி விழுங்க வயிறு கழிச்சல் நிக்கும். இப்படி மூன்று நாள் குடிக்க மோர் மாற்று. மோர் யிரு நாழிக்கு கருவேப்பந் தண்டும் காவட்டம்புல்லும் சிறுகாஞ்சோறி வேர் அசமதாகம் சுக்கு யிவை நாலு கழுஞ்சு யிட்டு நாழியொன்றாய் காய்ச்சி வார்த்துண்ண நிற்கணும் அதிசார சுரம் நிற்கும்.

ஆ. கிராணி இனம் :-

வாய்கிட்ட இரதம் தெரியாமலும், சோறு செரியாமலும் தண்ணீர் தாகமும், மின்னி பரந்து வருகையும், உடம்பு இளைக்கும், வெச்சென்றிருக்கும், சோகை வெளுத்திருக்கும் வயறு நோக்காடும், கையும் காலும் பெருத்திருக்கும் இந்த நோவுக் கிராணிக்கும்.

வாத கிராணி இனம் :-

காதிரைச்சல் இருக்கும்

வாய் உலர்ந்திருக்கும். ~~முன் இருட்டியாருக்கும்~~. ~~செவி~~ ~~அடை உண்டாயிருக்கும்~~. இரண்டு விலா ~~வழுயும்~~, இவ்விடங்களில் இரண்டு தொடையும் அரை ~~சந்தும்~~ நோவு ~~உண்டாயிருக்~~கும். ~~பல் காலும்~~ வாய் அடைக்கும். ~~இருதயங்கள்~~ இல்லாதிருக்கும் ~~வெண்மடியாருக்கும்~~. ~~தண்ணீர்~~ தாகம் பசியாமல் ~~விடா~~ ~~யிருக்கும்~~. உண்ட சோறு மனமறக்கும். உண்ட வாந்தியாகும் ~~வயறு பொருமியெருக்கும்~~. வாதத்தாலே வரும் வாறே நெஞ்சு நோக்காடும். உதிர மேல் பேலிகையோ பாண்டு ரோக ~~மனாறு~~ மாறும் ~~இந்த ஆம்பர் கேறும்~~. மலம் விடும் போது சலப்பெருது முகத்திலே படும். மலம் விரும் போது சவப்பொது முகத்திலே படும். மலம் கொழும்பாயிருத்தல், சிவந்திருத்தல், எரித்திருத்தல், இதன் இனமாகும்

இஞ்சிக் கஷாயம் ~~வைக்க~~ :-

சுக்குத் தோல் போக்கிக் கொண்டு ஆயில் பட்டை, புரசம் பட்டை, பெருமரப்பட்டை, மூக்குரட்டை, நாரத்தை கிருகாஞ் சொறி வேர், வட்டத்திருப்பு வேர், நாகத்தாளி வேர், ஒதியன்றுக்காய், நெல்லடை யாறுக்கு ~~தண்ணீர்~~ நீர்விட்டு நாலொன்றாய் குறுக்கி யடித்து அணி காய்ச்சி வடித்து கொண்டு தீர்கும்:- சீதகம், அசமிரக்கம்

சுக்கு, மிளகு, கருவேப்பிலை, உப்பு ஆகிய
வற்றைச் அரைத்துச் சேர்த்து சாப்பிட வயிற்றிரைச்சல்,
வயிற்றுவலி, ஆகியவை தீரும்.

சுக்கு, மிளகு, திப்பிலி, கற்கடசிங்கி, மாதுளை ஓடு, கிராம்பு, வசம்பு, ஒரொன்று கழஞ்சு வசம்பு சுட்டு கூட்டவும். கஷாயம் ~~தண்ணீர்~~ விட்டு அரைத்து பசுவின் நெய் நாழிப்படி கட்டி பதத்தில் வடித்து நாளொன்றுக்கு முக்கழஞ்சு கொள்ளவும். இதுக்கு அதிசாரமும், கிராணியும் தீரும்.

புளியாரை சாறு நாழி. பசுவின் நெய் நாழி.

கற்கம்:- வட்டத்திருப்பி, அத்திப்பூ, இலவம்பிஞ்சு, செவ்வியம், மரமஞ்சள், வாசண்டிவேர், சவுக்காரம், கொடுவேலிவேர், செங்கழுநீர்க் கிழங்கு, விலாமிச்சம் வேர், திருவேலிவேர், சந்தனம், மனோசிலை, இலவங்க பட்டை, தேவதாரம், சுக்கு, கொத்தமல்லி, யவை ஒரொன்று கழஞ்சு கூட்டி அரைத்து கரைத்து பதத்தில் வடித்து கொண்டு நாளொன்றுக்கு நெல்லிக் காய் அளவு கொள்ளவும். இதுக்கு பித்த கிராணி, அதிசாரந் தீரும்.

அH. அ கழிச்சலுக்கு:-

வேப்பிலைப் பொடி, கஞ்சாப்பொடி, கடுக்காய், அசமதாகம் அரைத்து குளிகை கடலை ~~பிரமாணம்~~ அளவு கொள்ளவும். சீரம் கிரமம். மாய் நோமாய்க்கும்.) நோமாகும்

(நக்கரி நரிபிர:-

சுக்கொடு மிளகொடு கடுகரு வேப்பிலை
உப்பொடு பெ... லை ஒக்கக் கொண்டிடில்
நக்கரி நரிபிரி யான வயறுகள்
தக்கத்தின் தொத்திடும் கண்டுகோ ளாத்தின்)

பல்வேறு விதமாய் (நான்கு) மலம் கழிதல், வயிற்றுவலி ஏற்படுதல் உட்கொள்ளும் மருந்தும் அவ்வாறே வந்து விடுதல்

புங்கு, கடம்பு, நாவல், கோரைக்கிழங்கு, ஆகிய மருந்துச் சரக்குகளைச் சமனெடுத்து 2.6லி தண்ணீரேற்றி குடிநீராய்க் காய்ச்சி 325 மி.லியாய்ச் சுண்ட வைத்துக் கொள்ளவும். இதைக்குடிக்க போரிட்டு பெற்ற புண்ணின் தழும்பு மாறும்.

சீதம், நிணம் இவை கழிச்சலில் தோன்றுதல், கடுப்புண்டாதல், வேதனையாதல் ஆகிய குறிகுணங்கள் உள்ளதிற்கு மருந்து கீழ் வருமாறு:

வெள்ளாட்டுப்பாலில் சாங்கிநீற்றை அரைத்துக் கலந்து எலுமிச்சம்பழச் சாற்றையும் சேர்த்து கொடுக்க குணமாகும்.

நாலுவிதமாய் மலங்கழியும்
நடுவே வயிற்றின் நோவாகும்
உள்ளே கழன்று தேய்ந்திருக்கும் /
குடித்த மருந்தியும் பேணே
மெத்தவிட் டுந்தவரும் பித்தகழிச்சல் குணமிதுவே //

இதற்கு மருந்து:- நெய், வெங்காரம், லவங்கம்,
சங்குனி, சாதிக்காய் உடனே கூட்ட கழிச்சலதனை
தோத்தராப் கட்டலை அளவுதான் ... குசக்கே
பார்க்க குறைங்கடைத்தாப் போல அடைக்கும்.

மங்கு
கருவேலம் புங்கொடு கடம்பு, நாவல்
கதிர்மிகு சண்டியல் கிடந்த கோரை, கோரை கிழங்கு
இடுமிரு நாழிவார்த்து உழக்க தாக்கி
இரவொடு வைத்து வெடிவே தண்ணீ
பொறுஞை வானரம் அறுபது ஒருபது
சேனை குடிமறு கட்டை செய்து
இரண்டு போர்த ... இப்படி
குருதியும் வழும்பும் மாறுமே //

182ம் பக்கத்திலும் இப்பாடல் உள்ளது

சீதமும் வழும்பும் தோன்றி
சிவந்தநீ கடுப்பு முண்டாய்
வேதனை ... கில் [illegible]
விளம்பினேன் ஒன்று கேளாய்
சாதிவைன் சாட்டுப் பாலில்
சங்குவெண்ணைத்தை நெய்த்து

வெள்ளாட்டுப்பால் சங்கிடுநு எ. [illegible]

சேதியாய் கின்ப ... பு
சேர்த்துடன் குடிக்க போமே //

வரட்பூலா, ஜிடத்தேரி, நீர்ப்பூலா ஆகியவற்-றின் வேர்கள், கஞ்சா, நெல்லி முள்ளி ஆகிய மருந்துச் சரக்குகளைப் பொடித்துக் கொள்ளவும். அதனைச் சந்தனக் குழம்புடன் சேர்த்துக் கொடுக்க வயிற்றுக் கழிச்சலும் அதனால் ஏற்படும் குறைகளும் குணமாகும்.

அபினி, இலவங்கப்பட்டை, பூ, காய், சீரகம், வெல்லம் ஆகிய மருந்துச் சரக்குகளைச் சேர்த்தரைத்து ஒரு உருண்டையளவு தயிர் அல்லது தேனில் கலந்து உட்கொள்ள கழிச்சலனைத்தும் குணமாகும்.

மஞ்சா நிறை சேர் வெழுபுள
மேவும் விடத்தேறி நீர்புள
அஞ்சா திவையின் வேர்..ல்
212.அ. அசையும் கஞ்சா நெல்லிமுள்ளி
பஞ்சா யழுத்து பொடிசெய்து
பாருஞ் சந்தனி தெழும்புடனே
மஞ்சாள் இழவான் வயத்துகழிச்சல்
வெரும்பும் தீரும் நிந்திதுவே. //

அபினியால் வரும்கத தோஷம்
அதுகாரம் பூவும் காயும்
சீரகம் வெல்லம் கூட்டி
சிக்கென அரைத்து உண்டை
அதுதயர் தேனில் கொள்ள.
மாறிடும் கழிச்சல் வெல்லாம்
அறிந்து நின்தனைக் கொள்ளீரே //

குடல்படுவன் நீர் பாட்டுக்கு உழலைக்கு மொத்திருக்கன் செவிவேரை ஒரு பாக்களவு அரைத்து மலைப்பாலில் கொடுக்க சத்தியும், உழலையும், கழிச்சலும் நிற்கும். இந்த வேர் தாவ சாரத்துக்கு இளவெண்ணீரில் கொடுக்கவும். இந்த வேர் சிறுபிள்ளை தோஷ கழிச்சலுக்கு சண்டைக்காய் அளவு அரைத்து முலைப்பாலில் கொடுக்கவும். கழிச்சலும், உழலையும் நிற்கும். இந்த வேர் குளிசமாய்க் கட்டவும்.

கலிக்கம்:

சுத்தி செய்த துத்தம் 1 பலம், சுத்திகரிக்கப்படாத துத்தம் 2 பலம், நல்ல சாதிசிங்கு 4 பலம், எடுத்து எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்து கண்ணில் கலிக்கமாக ஊற்ற நோய் தீரும்.

சங்கு, திப்பிலி, மிளகு, சுக்கு, அரிதாரம், அதிமதுரம், புங்கம் விதை, பீதரோகணி, மயில்துத்தம், மனோசிலை ஆகிய மருந்துச் சரக்குகளை நந்தியாவட்டச் சாற்றினை விட்டரைத்து
கண்ணில் கலிக்கமாக இட காசம் நீங்கும்.

பூவிற்கு நெய்யிலும் புருக்கடிக்கு இஞ்சியிலும் மாலைக் கண்ணிற்கு மணத்தக்காளியிலும் நீருக்குத் தேனிலும் நீலிக்கு வெள்ளைச்சாறு வெள்ளை வேர் சாற்றிலும் கொடுக்க இணையாகும்.

புண்ணுக்குப் புளியிலைச்சாற்றிலும் பூப்படலத்திற்கு மாதுளைச் சாற்றிலும் கொடுக்கவும்.

கையாந்தகரைச் சாறு, நல்லெண்ணெய் ஆகியவற்றை வகைக்கு 325 மி.லி, பால் 2.6 லி எடுக்கவும்.

213.அ. கலிக்கம் :-

சுத்த சுத்தம் காரியம்
சொறியன் சுத்தம் அதுக்குரைப்பு
சாதி சங்கு தெக்குரைப்பு

. . . .

ஏதிட் டரைப்போ மென்னாதே
எழுமிச் சம்பழச் சாற்றரைத்து
வேதித் தெடுத்த கண்ணிலிட
வியாதி போக்கி வெளியாமே //

சங்கு திப்பிலி மிளகு
சுக்கொடு தாரமும் அதிமதுரமும்
புங்கு வித்தொடு பிதரோகணி
கொடிய சுத்தம் மனோசிலையும்
அங்க ரைப்பதும் நந்தியா
வட்டச்சாறு விட்டு அளாவிய
கங்கில் பத்திய விழிதனக்கிட
காச மானது நாசமாம் . //

சண்ணீய விடு
பூவக்கு நெய்யால் புழுக்கடிக்கு கஞ்சியில்
மாலைக் கண்ணீருக்கு மைத்தக் காளியில்
சிறுக்கித் தேன் மயாக்கும் சௌவெந்த படலம்
நீலி வெள்ளைச்சாறு வேளைவேர் சாத்து. //

புண்ணுக்கு புளியிலையில் பூப்படலம் மெதுவா
திண்ண இன்பாய் ரசகம் ஒன்படலம்
தென்னனி குப்பி வரண்டுக்கும் கொந்தனருக்காய்.
கையாந் தகரை சாறுநல் வெண்ணெய்
உழக்கு கறந்த பாலும் யுகொழி

அனைத்தையும் கலந்து கொள்ளவும். அதிமதுரம், சந்தனம், நன்னாரி, விலாமிச்சை, இருவேலி, இலவங்கம், செண்பகப்பூ ஆகியவற்றை வகைக்கு 10கி எடுத்து அரைத்து மேற்சொன்ன கலவையில் போட்டெரித்துத் தலையில் ஊற்ற செவிநோய், கண்காசம் தீரும்.

வெய்யழ் குவிரவி அதிமதுரம்
மிகுத்த சந்தனம் நன்னாரி
துய்ய விளாமிச்சை யருவேலி
துலங்கும் லவங்கம் செண்பகப்பூ
பெய்ய கிழுத்து ஒறொன்று
பங்கா ளொறைான் நிருகழுஞ்சு
நய்ய வரைத்து பதமாக்கி
காச்சி வடித்து தலைவார்க்க
உய்ய செவியுடன் கண்காசம்
ஓடி ஒளிந்து போய்விடுமே//

214.அ. அகத்தியர் வாகட பிரகாரம் சீந்தில் சர்க்கரை பண்ணுகிற வயனம்:-

சீந்தல் பருத்திண்டாய் ஒருகட்டு கொண்டு வந்து யிடித்து சூரணம் செய்து அதிலே தினம் க க்கு நாழி படி நாள் விட்டு உறைவைத்து காலை யிறுத்து ~~யிந்தபடிக்கு~~ பதினொருநாள் வார்த்து யிறுத்து போட்டு காடியால் உழக்கு எலுமிச்சம்பழம் முக்கால் உழக்கு சாறுவிட்டு ஒருநாள் உறை வைத்து மறுபடி இறுத்து ~~போட்டு~~ மறுபடி பசுவின்மோர் நாழி வார்த்து பழம் சாறு ௧. கூட வார்த்து உறைவைத்து அதுவும் யிறுத்துப் ~~போட்டு~~ பசுவின் பால் வார்த்து வங்காள சீனி அரைப்படி போட்டு உலர்த்தி வாசனை அழிந்த சஞ்சீவி சக்கரையாம். இதனால் அஸ்திசுரமெல்லாம் போம். இதுவும் மேகத்துக்கு:-

திரிகடுகு, அதிமதுரம், ஏலம், வாய்விளங்கம், தக்கோலம், கற்பூரம், குங்குமப்பூ, சீரகம்,

கோரோசனை, கஸ்தூரி, சாதிக்காய், சாதிபத்திரி,
கிராம்பு, கிலை வகைகள் எல்லாம் பல ௧.
இளவறுப்பாய் சூரணித்து கலந்து கொண்டு சூரணமும்
விரல் கொண்டது சாப்பிட தேகம் 18-ம் போம்.

215. அ. தலைக்கு தயிலம்.

பசுவின் பால், குதிரை புல், கழுதை புல், ஆமை
ஓடு, முட்டை ஓடு, பவழம், கலைக்கொம்பு,
சமுத்திரசத்தி, சங்கு, கடல்நுரை, பளிங்குக்கல்
(தாம்பூரம்,) துத்தம், அதிமதுரம், சந்தனம், கற்பூரம்,
யிலைகட்டி கோழிமுட்டை வெள்ளைக்கரு
விட்டரைத்து கலக்கச் செய்து நிழலில் உலர்த்தி கண்வியா
திக்கு அருமையாகவிடவும். அரிந்து
இடவும். (இதற்கு பிறகு மாதரைக்கொடுத்து
அரைத்து பசுவின் பாலில் குழப்பி நிறப்பதைக்
கொள்ளவும். பிறவைய மிட்டு கருப்பு, ... தீரும்.

கண்வியாதிக்கு கண்ணுக்கு அஞ்சனம்:-

மயில் துத்தம் ஒருபலம், பீங்கான் ஒருபலம், சிறுகீரை
பொன்னாங்கண்ணி, நீர்நிலைத்தாமரை, வகைக்கு பல௧,
எலுமிச்சம் பழச்சாற்றினால் அரைத்து அடைபிடித்து வெயிலில்
வைத்து உலர்த்தி சட்டியிலிட்டு மூடி ஒரு அழக்கி புட
மிட்டு எடுத்து பொடிசெய்து இழைநெருங்கின
சீலையால் கட்டிசலித்து குப்பியில்வைத்து சிறுபயறு
அளவு கண்ணிலிடவும். இதற்கு வர்ண சக்கிரம், இரண சக்கிரம், கண் கூச்சம் இவை தீரும்.

ஒழுணை அக்கிரோன். வெளிச்சம் பார்க்க ஒட்டாது.
கண் குருக்கும். கெருட அஞ்சனம்:—
தேற்றான் கொட்டை, இந்துப்பு, சீனக்காரம், இரசம்,
தாம்பிர பற்பம், லோக பற்பம், சிலாஞ்சனம், மயில்
துத்தம், பிதரோகணி, கடல்நுரை, தலைசுரு, செவி
216 அ. முசனம், மனோசிலை, திரிகடுகு, சாபு, வெங்கா
ரம், பலகறை, சந்தனம், வசம்பு, ஈயம், திராட்சை
சந்தன புஷ்பம் சாறு விட்டரைத்து ஜாதிக்காய் குளிகை
அனுபானம் வெள்ளை காக்கணம்பூ சாற்றில், இந்திய
வட்டம்பூ சாற்றில், பனைமட்டைச் சாற்றில், முலைப்
பாலில், ஆவாரம்பூ சாற்றில் அரைத்திட எல்லா
கண் நோயும் தீரும்.

கண்ணுக்கு:—

பொன்னாங் கண்ணி, கரிசிலாங்கண்ணி, ஒரிலைத்தாமரை,
ஒரிலைதாமரை, ஆவாரம் முருங்கை முக்கிரட்டை
பசுவின் பாலில் அரைத்து காய்ச்சி புனைத்தி தயிர்கடைந்து
வெண்ணெய் எடுத்து நல்ல தண்ணீரில் போட்டு நோன்
கடுவி போட்டு அதில் சிதரோகணி, கற்பூரம், உப்பு
கல்லும் பொடி செய்து கூட்டி சமித்து கண்ணில் போட உள்ள
நோயெல்லாம் தீரும்.

இந்துப்பு இலுப்பை தக்க சவுக்காரம் இருக்க
ஆ. தக்க வெண்ணெய் விட்டரைத்து பஞ்சு பதிஞ்சசெய்து
பிறந்தபிள்ளை பச்சைக்கிளிக் கொத்த வண்ணம் பிறக்கும்.
பிறந்தபின் பச்சைக்கிளிக் கொத்த வண்ணம் பிறக்கும்.
கொத்தி கொதிச்ச கண் பிரிச்சதுக்கு கொள்ளுப்பருப்பு
தணைக்கொக்க இதனால் அந்திக்கு முன்னே விலம்பு
நிக்கும்.

அவைகடன் மிதைவும் அதித்தல் போல் ஒத்த கண்ணும்.

நெய் குளிகை :- திரிபாலை, அதிமதுரம், வெள்ளிலோத்திரம், மரமஞ்சள், வேப்பந் தோல், பாலை வேர், பொன்னாங்கண்ணி வேர், ஓரொன்று கழஞ்சு கூட்டி வெள்ளாட்டுப் பால் விட்டரைத்து ஒருபடி பசுவின் நெய்யால் எரித்து கண்ணில் இறுக்க மூழ்க, கண் அழற்சியும், விக்கமும், வெளுப்புந் தீரும்.

சபுகன் சாலுகு, துளசி, ஓரிலைத் தாமரை வேர் சமன்
217 கூட்டி எலுமிச்சம் சாற்றிலரைத்து கிண்ணியில் வெதுப்பி
அ. கண்ணில் பிழிய கருப்பு, வலிப்பு, அன்ன பேதம்
இவையெல்லாம் தீரும்.

எலுமிச்சம் பழ பருப்பு பத்து பணவெடை, மிளகு இரண்டரை பணவெடை, துத்தம் பத்து பணவெடை, தலைமயிர் சுட்ட சாம்பல் பன்னிரெண்டரை பணவெடை அரைப்படி சிலம்ப வைத்தரைத்து உண்டை எடுத்து ஆணிப்பூவும் கண்ணாடி பண்ணி அனுபானத்தில். புண்டான நோயெல்லாம் தீரும்.

கண் மையிடு :- சிறுகீரை வேர், பொன்னாங்கண்ணி வேர், ஓரிலைத்தாமரை வேர், வெங்கல் சத்து, செம்பு, துருசு, தலை ஓடு, அஞ்சனக்கல், வைரக்கல், அன்னபேதிக்கல், சாலுகு, பவழம், முத்து யாவை புளியிலை சாற்றிலரைத்து மிளகளவு உருண்டை செய்து நிழலில் வைத்து

கண் சிகப்பாக மாறும்; தலை கனத்து வலித்தல்,
காய்ச்சலடித்தல், வயிறு உப்பிசமாதல், வாந்தி
யுண்டாதல், ஆகிய குறிகுணங்கள் சிலேத்துமத்
தினால் வந்ததென்று அறிந்து கொள்ளலாம்.

பூவிருந்த கண்ணிற்கு பனைவெட்டை சாற்றில் ஒருநாள் இடவும். கண்ணில் பூ போய்விடும்.

சிங்கிகாரம் பொரித்து பசுவின் வெண்ணெயில் குழப்பி கரண்டியால் உருக்கி உருக்கினதை தண்ணீரில் காய்ச்சி ஆறின பின்பு வெண்ணெயை எடுத்து அதில் மேலயாட்டு கஸ்தூரி கழுங்கு, பச்சை கற்பூரம் மூணு பணவெடையும் கூட்டி செய்து கொண்டு பதைத்து சிமிழில் வைத்து கண்ணிலிட காசம், படலம் யாவையெல்லாம் புகைச்சல், வலி, வீக்கம், யாவையெல்லாம் குணமாம்.

கண்ணது செகப்புண் டாகும் (சிகப்புண்டாகில்)
கனக்கும் மேன் தலையும் நோவாம் (தலைகனம் நோவு)
எண்ணிய சாமண் டாகும்
இவையுடன் வெய்யு போங்கும் (வலது உப்புசம்)
பண்ணிய சத்தி தானும் (வாந்தி)
பருந்துடன் தொணு மாகில்
கண்ணிய சேத்து மத்தில்
கருகியே வந்த தண்ணே //

218-அ. காமாலைக்கு சிந்தூர லேகியம்:-

புளியிலை பலம் ஒன்று, கிரும்பு பலம் ஒன்று, மூக்கத்தாரி பலம் ஒன்று, மிளகரணை பலம் ஒன்று, சங்கம் வேர் பலம் உ, கீழாநெல்லி பலம் ஒன்று, நன்னாரி பலம் ஒன்று, குமிழம் பலம் ஒன்று, நரிப்பயற்று கிழங்கு வேர் பலம் ஒன்று, வெற்புல்லாந்தி பலம் ஒன்று, கையாந்தரை பலம் ஒன்று, கொஞ்சி பலம் ஒன்று, நாயுருவி பலம் ஒன்று, முசுமுசுக்கை பலம் ஒன்று, முன்னை வேர் பலம் ஒன்று, வில்வ வேர் பலம் ஒன்று,

ஆவர்த்தை வேர் பல ௫, சிறு வழுதலை பல ௫, முக்காப்
வேளை பல ௫, கொன்றைக்காய் வேளை பல ௧, நாய்
வேளை பல ௫, ஆடாதோடை பல ௫, நெருஞ்சில்
பல ௫, சீந்தில் பல ௫, கோரைக்கிழங்கு பல ௫,
நிர்முள்ளி பல ௫, காட்டு மல்லிகை பல ௫, கரசணாங்
கண்ணி பல ௫, பூனைக்காஞ்சொறி பல ௫, புளியாரை
பல ௫, கற்சாம் கோரை பல ௫, நிலைப்பன் பல ௫,
குண்ணிமுட்டான் பல ௫, புளியாளை ~~வேளை~~ காச்சி
~~யிரும்பு வேளை~~ பொடியிரும்பாய் காச்சி ~~மத்த கிடா~~
~~யமெல்லாம் வேளை~~ எழுமான் காச்சி, எல்லாம்
கூட்டி சட்டியில் இறுத்து இறுக காச்சி கடைமருந்து
திப்பிலி பல ௪, மிளகு பல ௪, சுக்கு பல ௪, சீரகம் பல [illegible]
ஏலம் பல ௧, ஓமம் பல ௪, வாயுவிளங்கம் பல ௧,
அமுக்கிறாய் பல ௧, பரங்கிப்பட்டை பல ௨, சித்திர
மூலம் பல ௧, செவ்வியம் பல ௨, கண்டுபாரங்கி பல ௧,
தம்பராஷ்டம் பல ௨, இலவங்கப்பட்டை பல ௨, சிறு
இலவங்கபட்டை பல ௧, சிறுநாகப்பூ பல ௧, கொத்த
மல்லி பல ௧, அதிமதுரம் பல ௨, அக்கராகாரம் பல ௨,
யானைத்திப்பிலி பல ௨, குரோசாணி ஓமம் பல ௨,
கடுக்காய் பல ௪, இலவங்கம் பல ௨, தாளிசபத்திரி
பல ௨, திராட்சைப்பழம் பல ௧, பேரீச்சம்பழம் பல ௨ நாரத்தம்பழம் பலம் ௰
கொம்மட்டி மாதுளை ஒன்று, இஞ்சி பல ௰, வெல்லம்
பல ௫௰, தேன் பலம் ௰, அரப்பொடி பல ௨,
கஷாயம் வடியிட்டு வெல்லம் கரைத்து வடியிட்டு
இறுக பாகுபதமானால் கடைமருந்து இடித்து சூரணம்
(செய்து) ~~பண்ணி~~ பதத்தில் பொடியிட்டு கிளறி பிறகு தேன்

நோயின் அறிகுறி:-

கழுத்து வலித்தல், வயிறு வலித்தல், உடல் மிகவும் இளைத்துப் போதல், வறட்சியாதல் ஆகிய குறிகுணங்கள் வாதசிலேத்துமத்தினுடையவை

காது, கண், தலை இவை கிறுகிறுவென்று சுற்றுதல், வெடுவெடு என்று நடுக்கல் காணல், வாந்தி ஏற்படல் ஆகிய குறிகுணங்கள் பித்தத்தினுடையவை.

இதற்கு மருந்து:-

விளாவிலை, அத்தி மல்லிகை, வெள்ளரி ஆகிய மருந்துச் சரக்குகளைப் பச்சைப் பயற்றின் கஞ்சியில் பொடித்துக் கொடுக்க வாந்தி தணியும்.

விட்டு திராக்ஷை பழமும், பீச்சம் பழமும் போட்டு
கிளறி எண்ணெய் குடத்தில் எடுத்து தானிய புடம்
வைத்து தின்ன பன்னிரெண்டு காமாலையும் போம்.

319. அ. ரோக லக்ஷணம் :-

கண்மென பெட்டறை நொந்து
கதறிட வயத்தை (வயிறுதனை) நொந்து
இடற்பட உடம்பு வத்தி ற்றி
இறங்கியே தொறு மாகில்
. . . உஷ்டன் வாத சேத்துமமென்று
வகுத்தனர் கண்டு தானே. //

கிறுகிறு யென்று மிங்கே
செவியுங் கண்தனை (. . சா. த்தி) சுற்றி
வெருவெடு வெறவி னோடே
வேண்டிய மயக்கங் காட்டில்
படியென சத்தி தோன்றில்
பித்தக . . . . தின் கூறு தானே. //

இதுக்கு மருந்து :-

நீக்கம் தனியே விளாவிளை
சுத்த மல்லிகை சுட்டிடத்தி . . .
. . . . நிலவெள்ளாளி
வெள்ளரி சிக்கழி நீரோடு
கோல மாணிக்குறும்பு பயத்தம் கஞ்சியால்
ஏலமேற பொ . . . . . டித்திட
சால வந்தன எசத்தியுஞ் சத்தியுஞ் சாயுமே //

ஏலம், வெற்றிலையின் காம்பு, எலுமிச்சம் பழத்தின் விதை. ஆகிய மருந்துப் பொருட்களை எடுத்து அரைத்து வெந்நீரில் கலந்து கொடுத்திட வாந்தியும் நின்று விடும். வெட-வெட-வென்று நடுங்குவதும் போய்விடும்.

செம்மை நிறத்தவளான பெண்ணிருக்கு விக்கல் வருமாயின் இ மருந்து கீழ்வருமாறு.
சந்தனம், நெற்பொரி விலாமிச்சை
ஆகியவற்றை வேக வைத்து அந்நீரிலேயே அரைத்துக் கொடுக்க விக்காளம் குணமாகும்.

சந்தனத்தோல், நெற்பொரி,

ஏலம் வெத்திலையின் காம்பு
எலும்பிச்சம்பழம் . . . . வித்து .
தோல் போக்கி நாடிடித்து வெந்நீர்
கொண்டு அருந்திட கஞ்சி பின்பு
அனிதரு சத்தி கெட்டு வெட . . ~~விடன்று~~
~~விடை கெ~~ விடன்று. விடைகொண் டேகுமே//

செம்பொத்த மேனி தன்னிட முலையனாள்
உம்பொத்த நெய்யால் கடை . . . .
வெம்பொத்த மேனியால் வந்திடு விக்கலாம்
திக்கிடப் போமே திசைதிசை ஓடியே//

ரெ.ந. ல்.பொரி
சந்தனத் தோடு . . . .
அஞ்சினத் தோடு அமர்ந்த விளாமிச்சை
வெந்நீரில் நீரில் குழப்பிசெய் உண்டிட
நெஞ்சில் நில்லாது . . . . . ஓக்காளமே//

நல்வாசாரம் கழஞ்சு, கிராம்பு கண்ணிக் கொழுந்து ஒருகழஞ்சு அரைத்து ப்புளிப்பக் ஓக்காளமும் விக்கலும் நீங்கும். வாழைச் சருகு ஒரு சட்டியிலிட்டு சுட்டு அதிலே தண்ணீர் நாழிவிட்டு ஊறின பிறகு வடித்து பனைவெல்லம் ~~புக்கல்~~ளவு கரைத்து இருக்க வென் ஓக்காளமும் சத்தியும் தீரும்.

பூசிணி இலையும் பூவும் பொருந்திடு சுக்குத் தேறும். தாற்றணி மாதர் பாலும் வாறணியும் மேல் ~~கொ~~குமயலாய் மறவாமல் அமுக்கிராய் வேரும், சாறு வேளை வேரும். பொடிசெய்து தேனிலிட விக்கல் தீரும்.

கொடிவேலி வேர் கழஞ்சு மருதோதியும்.
